1984 பிப்ரவரி 17]

அவசியத்தைக் கூடுமானவரையில் நிறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு தங்களுடைய அறிவு, ஆற்றல், உழைப்பு ஆகியவற்றில் நம்பிக்கை ஏற்படக்கூடும்.

திரு. சி. ஆர். கோலப்பா : பரிசுச் சீட்டுக்களின் மூலம் பல ஏழைகள் இலட்சாதிபதிகளாக ஆகியிருக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு தொடர்ந்து பரிசுச் சீட்டுக்களை நடத்தி தமிழகத்திலே உள்ள பல ஏழைகளை இலட்சாதிபதிகளாக ஆக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல ஏழைகள் இலட்சாதிபதிகள் ஆவதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கூட இலட்சாதிபதிகளாக ஆக்க விரும்புகிறேன். அதன் மூலம் சம்பளம் கொடுக்காமல் நிறுத்த வழி தேடக்கூடும். சிலர் என்று சொல்லுவது கூட பொருந்தாது. மிகமிகச் சிலர், ஒருவர்-இருவர் பெயரைப் போடக்கூடிய அளவிற்குத்தான் வருகிறது. இலட்சக்கணக்கான மக்கள் வாங்கிய பிறகு ஒருவர், இருவருக்கு மட்டும் முதல் பரிசு விழுகிறது. இதிலே 35 சதவீதம் மத்திய அரசு வருமான வரியாக எடுத்துக்கொள்கிறது. மேலும் ஒரு 20 சதவீதம் வரியாகப் போட்டு 55 சதவீதம் என்று ஆக்கி அதிலே 35 சதவீதத்தை அவர்கள் எடுத்துக் கொண்டு 20 சதவீதத்தை நமக்குக் கொடுத்தால் நல்லது. இந்த யோசனையை சமயம் வரும்போது சொல்லலாம் என்றிருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

Kesari Dhal. ....

*2 *Q.*—Thiru M. SANKARALINGAM (on behalf of Thiru S. J. Sadiq Pasha) : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government are aware of the import of 'Kesari Dhal' in Tamil Nadu from other States; and

(*b*) if so, whether the Government will come forward to ban the sale of Kesari Dhal in Tamil Nadu, in view of the reported health hazard?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1963-ம் ஆண்டே அரசு தடை செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அந்த ஆணை பிறப்பித்த பிறகும் இப்போதுதான் வெளி மாநிலங்களிலிருந்து கேசரிப் பருப்பு வருவதாகவும், அதை உணவுப் பண்டங்களிலே பயன்படுத்துகிறபோது மக்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதாகவும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ததா? அந்தத் தடையை அமல்படுத்துவதற்கு அரசு என்ன நடைமுறைகளை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேசரிப் பருப்பு என்பது நச்சுத் தன்மை கொண்டது என்ற விஞ்ஞானப் பூர்வமான அறிக்கையின் அடிப்படையிலே, இப்பருப்பை விற்பனை செய்வதோ, விற்பனைக்காக சேமித்து வைப்பதோ, அதைப் பயன்படுத்துவதோ குற்றம் என்பதாக 9-7-1963-லே சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கேசரிப் பருப்பை இங்கே கொண்டுவந்து பிற பருப்புகளோடு கலப்படம் செய்து விற்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வருகின்றபோது, அந்த நிலைமை கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். சில காலத்துக்கு முன்னால் கூட பிற மாநிலத்திலிருந்து 1,571 மூட்டைகள் கேசரிப் பருப்பு இங்குள்ள வியாபாரிகளால் இறக்குமதி செய்யப்பட்டு வந்துள்ளது. என்ற செய்தி வந்த உடனே, அதுபற்றி விசாரித்து, அவர்கள் பிற பருப்புகளோடு கலப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அந்தப் பருப்புகள் மீண்டும் அந்த மாநிலத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டது மட்டுமல்லாமல், அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று, கலப்படம் செய்வதாக அண்மையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அதைத் தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி, குறிப்பிட்ட அதிகாரிகள் ஆணையிடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவர் அவர்களே, உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கின்ற கேசரிப் பருப்பு வேறு மாநிலங்களிலிருந்து தமிழ் மாநிலத்திற்கு வருவது தடைசெய்யப்படுமானால், அது கள்ளத்தனமாக வருகிறது. உடல் நலத்திற்குக் கேடுவிளைவிக்கும் இந்தக் கேசரிப் பருப்பைப் பயிரிடக் கூடாது என்று என் மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யக்கூடாது? அது விஷயமாக மாநில அரசு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, தடை விதித்திருக்கிறோம். ஆகவே உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, நச்சுத் தன்மை கொண்டது என்று

1984 பிப்ரவரி 17]

விஞ்ஞான அடிப்படையிலே கண்டுபிடித்த பிறகு, அதை பயிரிடுவதற்கும், வியாபாரம் செய்வதற்கும் அனுமதிக்கக் கூடாதுதான். அது தக்க நேரத்தில் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, கேசரி பருப்பைத் துவரம் பருப்பில் கலப்பதைப் போலவே, இங்குள்ள வியாபாரிகள் இலவங்கப் பூவிலே வேறு விதமான அதே போன்றுள்ள பூவைக் கலக்கிறார்கள். பேரீச்சம் பழத்திலே வெல்லப்பாகை கலக்கிறார்கள். அதேபோல திராட்சைப் பழத்திலே தண்ணீரை ஊற்றி ஊறவைத்து விற்கிறார்கள். இப்படி கலப்படம் செய்து விற்பனை செய்வதை அரசு அறியுமா ? ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கலப் படத்தைத் தடுப்பதற்கும், அதிலே ஈடுபடுபவர்களுக்கு உரிய தண்டனை கொடுப்பதற்கும் சட்டம் இருக்கிறது. அதுவும் குறிப்பிட்ட துறைகளினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அகப்படுகிறவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். பல வழக்குகள் வழக்கு மன்றத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று அப்படிப்பட்ட வழக்குகளிலே தப்பிப்பதற்கான வழிவகைகளையும் வைத்திருக் கிறார்கள். அவைகளைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப்பற்றி ஆராய்ந்து வருகிறார்கள்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : கேசரிப் பருப்பைப் போல, கலப்படம் யார் செய்கிறார்கள் என்றால், மொத்த வியாபாரிகள் செய்கின்றார்கள். அந்த மொத்த வியாபாரிகள் பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இடங்களை அடிக்கடி சோதனை செய்து, இதைப் போன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கலப் படம் எங்கு ஆரம்பிக்கின்றது, எந்த முறையில் ஆரம்பிக்கின்றது என்ற அளவுக்கு அதைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. தண்டனைக்குரிய வர்கள், தண்டனை பெற வேண்டும். அதிலே நம்முடைய மாநிலத்தினரும் ஈடுபட்டிருக்கலாம், பிற மாநிலங்களில் இருப்பவர்களும் ஈடுபட்டிருக்கலாம். கலப்படம் என்று சொல்லும்போது, பெரிய வியாபாரிகள், அதாவது மொத்த வியாபாரிகள்கூட செய்கின்றார்கள். அதிலே கலப்படம் இருக்கின்றதா என்று தெரிவதில்லை. சிறிய வியாபாரிகள் அதிலே கலப்படம் இருக் கின்றதா என்று எங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்கின்றார்கள்.

அதனால் நாங்கள் தண்டனைக்கு ஆளாகவேண்டியிருக்கின்றது என்று சிறிய வியாபாரிகள் முறையீடு செய்கின்றார்கள். சிறிய வியாபாரிகள் தண்டனைக்கு ஆளாகாமல் இருக்குமாறு செய்யவேண்டும். குற்றம் செய்யாதவர்கள் தண்டனைக்கு ஆளாகக்கூடிய நிலைமையும் இருக்கின்றது. அதனை எந்த அளவுக்குத் தவிர்க்கலாம் என்பதுபற்றியும் இந்தத் துறை ஆராயும்.

Sales Tax on Tyres for Trucks and Buses.

* 3 *Q*.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that there is a great loss of revenue for the State, consequent on the increase in the rate of Sales Tax on Tyres for Trucks and Buses ; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this regard ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பாக பாண்டிச்சேரி பகுதியிலே அங்குள்ள வரி விதிப்பு விகிதம் குறைவாக இருந்த தால் நம்முடைய மாநிலத்தில் உள்ள அனைத்து பெரிய நிறுவனங்களையும் சார்ந்தவர்கள் அங்கே சென்று டயர்களை வாங்கி வந்து இந்த மாநிலத்தில் உபயோகம் செய்திருக்கின்றார்கள். நம்முடைய வரி விகிதத்திற்கும் அங் குள்ள வரி விகிதத்திற்கும் உள்ள வேறுபாடுதான் அதற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. பத்திரிகைகளிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அது உண்மையா? அதற்குப் பிறகு இந்த வரி விகிதத்தை நம்முடைய மாநிலத் திலே குறைத்திருக்கின்றோமா என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நம் முடைய மாநிலத்தில் அதனுடைய வரி 12 சதவிகிதமாக இருந்தது. அந்த 12 சதவிகிதத்தை 9 சதவிகிதமாக இன்று குறைத்திருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல. நம் மாநிலத்தில் இம்மாதிரியாக ஏற்படும் வியா பாரச் சிதறல்களை, Diversion of Trade தடுத்து நிறுத்த வேண்டுமென்று தேவையானபோது வரியைக் குறைத்தும், தேவையானபோது